# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫<br>குரோதி, ஆடி.<br>1964 ஜூலை, ஆகஸ்ட். | மலர் |
| ௪௰ | | ௪ |


## தமிழும் ஆய்வும்


(நக்கீரன் வழியடிமை. வித்துவான், பி. மா. சோமசுந்தரனார்)


### ௧. கன்னித்தமிழ்

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழ்க்கே ஆட்பட்ட புலவர் பெருமககளே! ஆய்விற்புகும் அறிஞர் பெருமக்களே! உங்கள் அடியிணை பரவிவிடுக்கும் எம்பணிவான வேண்டுகோளைச் செவிமடுத்தருள்வீராக. நம்மொழிக்கு இழிவும் அழிவும் வராமல் காக்கவேண்டியது நம்கடமையாம் என்பதைத் தமிழ்ப் பணிபுரியும் தாளாளர்—குறிப்பாக ஆய்விற்புகும் அறிஞன்மார் மனங்கொளல் வேண்டும். அன்றியும் மொழிநலம் பற்றிய பின்வரும் பேருண்மையை எக்காலத்தும் மறத்தலாகாது.

நம்தமிழ்மொழி தொன்மைநலம் வாய்ந்தது. அத்தொன்மைதான் இத்துணைத்தென யாவராலும் அளவிடற்கடங்காதது. பண்டைய உயர்தனிச் செம்மொழிகளெனப் பன்னப்படுவன பலவும் வழங்குவாரற்று வீந்துபோயினவாக, நம் செந்தமிழ் அன்றும் இன்றும் ஒரே தன்மைத்தாய் ஒளிபரப்பிவரலை யாவருமறிவர். என்றும் மாறா இளமைப்பண்பும் பசுமைப்பண்பும் கண்டே கன்னித்தமிழ் என்றும் பைந்தமிழ் என்றும் போற்றினர் நம் பண்டைப் பேராசிரியன்மார். இனிமையும் தண்மையும் இதன் சிறப்பியல்புகளாதலின் இன்றமிழ் என்றும் தண்டமிழ் என்றும் ஏத்திநின்றனர். முழுமை பெற்ற செம்மை நலங்கண்டு செந்தமிழ் என்று சிறப்பித்தனர். இத்தகு அடைகள்யாவும் தமிழின் பாலுளதாம் உண்மை நலங்கண்டு புணர்க்கப் பட்டனவேயன்றி உயர்வு நவிற்சி கருதியன்று என்பதைத் தமிழராவார் உணர்தல் வேண்டும். இனி நஞ்செந்தமிழ் இத்துணைக் காலங்கடந்தும்

மூவாவிளமை மேவியொளிர்தல் யாங்ஙனம் ஒல்லுவதாய தெனக் காண்பாம்.

### உ. வரம்பு கண்ட வல்லுநர்

பண்டை நாட்களில் சேரரும், சோழரும், செழியரும் தமிழின் விழுப்பமே தங்க கோலின் ஒழுகமாகக் கொண்டு வாழ்ந்தனர். மன்னனுயிர்த்தே மலர்தலையுலகமாதலின் மக்களும் அந்நெறியே குறிக்கொண்டு ஒழுகினர். தமிழைப் போற்றுவார் புலவரைப் போற்றுதல் வேண்டும். ஆதல் புலவரைப் போற்றினர் தமிழைப் போற்றினராயிற்று. இவ்வுண்மை தெளிந்த முடியுடை வேந்தர் மூவரும் புலவரைப் போற்றுதலோடு அமையாது அவர் வகுத்த அறநெறி பிழையாது ஒழுகியும் வந்தனர் கருஞ்சினை வேம்பின் தெரியற் காவலர் கழகம் கண்டு கன்னித்தமிழையும் கற்றுவல்ல ஆசிரியன்மாரையும் பேணி வந்தனர்.

அற்றைநாட் புலவன்மாரும் மொழித்துறையேயன்றி மற்றைத்துறைகளிலும் வியத்தகு மதிநலம் வாய்ந்தனர். சங்க நூற் பயிற்சியுடையார்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலனும் இப்பேரறிவினரே சங்கமிருந்து பைந்தமிழ் ஆய்ந்தனர். ஒருமொழி கண்டவாறெல்லாம் வழங்கப்பெறின், அஃது வேறு பல் மொழிகளையீன்றுதான் சாம் என்ற உண்மை தெளிந்து தமிழின் ஒழுகலாற்றிற்கோர் வரம்பும் கண்டனர், அவ்வரம்பே இலக்கணம எனப்பெயர் கொண்டு இலங்குகிறது என்றறிக.

இவ்விலக்கணம் ஒருவரே தனித்துநின்று முடித்ததன்று. அல்லதூஉம் ஒரு நாளில் இயன்றதூஉ மன்று. பலர் கூடிப் பல்லாயிரத்தாண்டுகள் உழைத்துக் கண்டது. முச்சங்க வரலாறு இம்மெய்ம்மை யுணர்த்தும். இப்பேருழைப்பின் பெருமை நோக்கியே,

> "கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
> பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
> மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
> எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ."

என்று பரஞ்சோதி முனிவர் பரவிமகிழ்ந்தனர். பற்றறத் துறந்த இப்பெருமானர் தமிழ்மாட்டுவைத்த பற்றில் ஆயிரத்திலொரு கூறேனும் இற்றைநாள் தமிழர் வைப்பரேல் தமிழ் திசையெங்கணும் இசைபரப்பி வாழும் என்பதற்கு ஐயமுண்டோ?

### ௩. ஆய்வும் சங்கமும்

சங்கத்திலுருந்து கண்டதாகலாற்றுன், தொல்காப்பியம் ஈடும் எடுப்புமில்லாத் தனிநூல் ஆகித்திகழ்கிறது. பிற்றை

நாளில் பலவாசிரியன்மார் பலவிலக்கண நூல்களை யாத்தனர். எனினும் இற்றைநாளிலும் ஆணை நூலாகவே திகழும் ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்தின் முன்னர்,வழக்கில் உள்ள நன்னூல் கதிரவன்முன்னர் மின்விளக்குப் போலவும் ஏனைய மின்மினி போலவுமேயுள்ளன.

இத்தகு பீடுசால் நூலினை ஆய்தற்குப் புகுவார் புலவராக இருத்தல் வேண்டும். புலவர் என்றால் புலமை நிறைந்தவர்—அறிவு நிறைந்தவர் என்ற பொருளுக்கு இலக்கியமாயுள்ளா ராகல் வேண்டுமேயலாது பல்கலைக் கழகப்பட்டங் கருதிப் பத்தாண்டு வினாத்தாள்களில் உழன்றவராயிருத்தல் கூடாது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் போன்று விரைந்து கவிபாடும் ஆற்றலும், டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களைப் போன்று பன்னூற் பயிற்சியும் பெற்றவரே ஆய்விற்புகுந் தகுதி பெற்றாராவர். இவ்விரு பண்புகளும் வாயாதார் ஆய்விற் புகுதல் எதுபோலவோ-வெனின் செந்திருவைப்போல் சிங்காரித்த அணங்கின் நாயகனாக அந்தகன் அமைந்ததுபோல என்க.

மியா என்னும்சொல் உரையசை என்ற தொல்காப்பிய விதியை மறுக்கப் புகுந்தார் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். தொல்காப்பியம் கிள்ளுக்கீரையன்று. அதுபற்றிப் பேச வேண்டுமாயின் எனக்கு மூன்றுதிங்கள் அவகாசம் வேண்டும் என்றுரைத்த மறைமலையடிகளாரின் நுண் மாணுழைபுலமாண்பும் நம்அறிவின் நொய்மையும்கண்டு நாணுதல் வேண்டும். நுனிப்புல் கறித்தஆடுகளைப்போல ஒரு சிலபாடல்களைத் தேர்வுகருதிப் படித்த நம் அறிவையும் இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பப்புகுந்த தொல்காப்பியனாரின் தமிழறிவையும், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று இசைதந்த அவர்தம் வடமொழிப் பேரறிவையும் சிறிதேனும் எண்ணிப்பார்ப்பின் 'பிழைகளும் குறைகளும் தொல்காப்பியத்தில் உள்ளன' என்று கூற எளியேம் போன்ற புல்லிய அறிவினர் நடுங்குவர்.

அன்றியும் பண்டைப் பேராசிரியன்மாரின் கூர்த்த மதிக்கும் இயற்கைப் பொருளையூடுருவிச் செல்லும் அவர்தம் ஆய்வின்வன்மைக்கும் சங்கநூற்களே சான்றுமென்க. நாமோ, மூச்சுவிடுமுன்னே முந்நூறும்' நானூறும் எனமுழங்கிய பதினைந்தாம் நூற்றாண்டுப் புலவரினும் தாழ்வுற்றநிலையில்—ஒருபாட்டை முடிப்பதற்குள் இறுதிமூச்சையே விட்டுவிடும் •நிலையில் உள்ளோம். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஏட்டைப்புரட்டாது பாடல்களைத்தாமே கூறிப் பொருள்விளக்குவாராம். பத்தாம் வகுப்பு மாணவ

குப் பாடஞ் சொல்லுதற்கே பிறர்தம்உரைநூல் நம்கையணிகலனாக உள்ளது. இந்த இலட்சணத்தில் நாம் இலக்கணம் ஆயப்புகுதல் கையில்லான் ஓவியந்தீட்டப்புகுதலையே ஒக்கும். புலவன்மாரின் பரிதாபமான இந்த நிலைமைகண்டே பாடுதற்குப் பரமனருள் பெற்றேம் என்று கூசாது சிலர் கூறித்திரிகின்றனர்.

இந்நிலையகன்றால்தன் தமிழுக்கு உய்வுண்டு. பண்டைப் புலவன்மார் சங்கத்திலிருந்து தமிழோம்பியவாறேபோல் இன்றைய புலவன்மாரும் சங்கமிருந்து தமிழ்க் காத்தல் வேண்டும். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைத் தலைமைக் கழகமாகக்கொண்டு ஊர்தோறும் கிளைச்சங்கங்கள் தோன்ற வேண்டும். பாடலாயினும், இலக்கண ஆய்வாயினும் இச்சங்கம் ஆய்ந்து இசைவு தந்தபின்னரே வெளியிடப்படல் வேண்டும். இவ்வுரிமையைச் சங்கம் பெறவேண்டும். புலவன்மார் ஒற்றுமைகாட்டி உழைப்பைநல்கித் தமிழ்வரம் பெறச் செய்தல் வேண்டும் என்பது எனது வேண்டுகோளன்று. அஃது அவர்தம் கடமையாம் என்றுணர்க. இன்றேல் போலி இறையருளாளரும் இலக்கண ஆய்வாளரும் தமிழைத் தளர்ச்சிகாண்பர். இம்முடிபுக்கு யான்உந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றை ஈண்டுரைத்தல் சாலும்.

## ச. ஓர் இலக்கண விளக்கம்

தமிழை எழுத்தெண்ணிப் படித்த பேராசிரியன்மார் உரையினை, வகுப்பில் மணி எண்ணிப்படித்த நாம் மறுக்கப் புகுதல் பிழைபடுமென்பதற்கு இஃதோர் நல்ல சான்றாகும். 'செற்றான்' என்ற சொல்லின்திரிபே 'செத்தான் என்பது என்றும் 'சாய்' என்ற சொல்லின் ஈற்றுமெய்கெட்டு 'சா' தோன்றிற்றென்றும் புலவர் வை. மு. இராமகிருட்டிணன் என்பார் நிறுவினர். அதனை மறுத்துத் திருவாட்டி. மேனகையம்மையார் உரையாசிரியர்முடிபே சிறந்ததென்று நிறுவினர். அம்மையாரை "அன்னை" என்பார் மறுத்துத் தமிழ்ப்பொழில் (குரோதி—வைகாசி) இதழில் இராமகிருட்டிணரின் முன்னைய முடிபை நிலைநாட்டியுள்ளார். இத்தனை முரண்பாடுகளும் நம்பாலுள்ள இலக்கியவிலக்கணப் பயிற்சிக்குறைவுக்கே சான்றாய் அமைவன. இனி, "அன்னை"யாரின் வழக்கையும் சிறிது ஆய்வாமாக.

செற்றான் என்ற சொற்குத் தன்வினை நிகழ்ச்சியாகப் பொருள்கோடற்கு இலக்கியமும் இன்றே என்ற 'மேனகை' யின் கூற்றை மறுத்து "அன்னை" கம்பர் பாடல் ஒன்றைச் சான்று காட்டுகிறார். அப்பாடலைக் கீழே காண்க.

"புண்டாழ் குருதியின் வெள்ளத் துயிர்கொடு புக்கார்
சிலர்சிலர் பொதிபேயின்
பண்டா ரத்திடை யிட்டார் தம்முடல் பட்டார் சிலர்சிலர்
பயமுந்தத்
திண்டா டித்திசை யறியா மறுகினர் செற்ருர் சிலர்சிலர்
செலவற்ருர்
கண்டார் கண்டதொர் திசையே விசைகொடு கால்விட்
டார்படை கைவிட்டார்."

இப்பாடலில் 'செற்ருர்' என்றவிடத்துச் 'சென்ருர்' என்று பாடபேதமுண்மை காட்டும் நேர்மையும் அப்பாடபேதம் பொருந்தாமை பேசுந்திறனும் போற்றற்பாலதே. செற்ருர் என்ற சொல் ஈண்டு அழிந்தார் என்ற பொருளில் ஆளப் பட்டுள்ளதென வழக்கிடலும் அழகிதே. ஆனல், ஐயகோ, தாம்கண்ட பொருள் "கூறியது கூறல்" என்ற குற்றத்துக்குக் கம்பரை ஆட்படுத்துவதென "அன்னே" அறியாராயினரே! பாடலில் கோடிட்ட இடங்களைப்பார்க்க, யாம் "செற்ருர்" என்பதன் உண்மைவடிவையும் பொருளையும் எடுத்துரைக்கும் கடப்பாடுடையே—மல்லேம். அதனை ஆசிரியர் பால் கேட்டுணர்க. இச்சொல் பழம்பெரும் புலவரான கோபால—கிருஷ்ணமாசாரியாரையே மயங்க வைத்துள்ளதெனில் "அன்னே" மயங்கல் வியப்பன்று. இன்னும் இதனனே 'செற்ருன்' என்றசொல் தன்வினை நிகழ்ச்சியாகவரும் இலக் கியமின் றென்பதூஉம் இலக்கியங் கண்டதற்கிலக்கணங் கூறும் மரபுப்படி அதனைத்தன்வினையாக் கொள்ளல் திரிபுணர்ச்சியின் பாற்படும் என்பதூஉம் துணியப்படும்.

அஃது பிறவினையாயின் தன்வினை யாதென "அன்னே" வினவினரேயெனின் அவ்விருதிரிபுணர்ச்சியான் எழுந்த தென்க. சிலவினைகள் பிறவினை நிகழ்ச்சியாயே இருப்பதனல் வரும் இழுக்கென்னையோ என்பது. சான்ருக "அன்னே" மதலைகளை ஈன்றுபுறந்தருவோரேயலாது தம்மையே ஈன்று புறந்தரவல்லரோ? அதுபோல என்பது. செற்ருன் என்ற சொல் பிறவினைப் பொருள்தருதல் நோக்கி அதனைப் பிறவினைச்சொல் எனல் ஏலாதென்ருராலோவெனின் யாம் இலக்கண ஆசிரியனல்லேம் இவர்தம் மயல்போக்க. ஆயினும் ஒன்று கூறுதும். வெருத்தான் என்றசொல் தன்வினை யாயும் இயங்கற்பாலது பிறவினையாயும் இயங்கற் பாலது. அகலின் அது பொதுவினையாயிற்று இஃது எது நோக்கி என்று 'அன்னே' சிறிது சிந்திப்பாராக.

செத்தான் என்றசொல் குறளிலும், தேவாரத்திலும், புறத்திலும் காணப்படுதல் வியப்பன்றென "அன்னே" உரைத் தாராலோவெனின்' நன்று கடாயினுய். இவ்வாறு மறுத்தலழ

கன்றி என்னை? அஃது வியப்பென்று யாமுங் கூறுவா-மல்லேம். அவ்வாறு பயின்றிருப்பவும் "செத்தான் என்ற சொல் பழைய இலக்கியங்களில் காணமுடியாவொன்று" எனத்தம் முதற்கட்டுரையில் இவர் கட்டுரைத்ததே வியப்பாமென்க. முற்கட்டுரையில் இடைக்காலத்தில் 'செற்ருன்' என்ற சொல் 'செத்தான்' எனத்திரிந்த தென்ருர். இக்கட்டுரையில் சங்க காலத்துக்கு முன்னரே எனத்தம்முடிபை மாற்றிக் கொண்டதே வியப்பாமென்க.

சாய்தல் என்பது அழிதல் என்னும் பொருளதென்ச் சான்றுகள் பல காட்டினராலெனின் கூறுதும் அச்சொற்கு அப்பொருளின்று என ஏவரேமறுத்தனரென்று இவர் இயம்பினரில்லையே. சாய்தல் என்பதன் உண்மைப்பொருள் யாது? எத்தகுதி பற்றி அழிவு என்ற பொருளில் வழங்கப் பட்டது என்பதன்ருே ஈண்டையவினு? 'சா' என்பது 'சாய்' என்பதன் குறைவடிவமானல் நன்னூலார் இதற்கு விதி கூருமை வியப்பன்ருே? என்னை?

"சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி"

என்று "சாவ" என்ற சொற்கு இலக்கணம் வகுத்தவர் "சாய்" என்ற சொற்குச் சொல்லாமை ஏனோ? நெடுங்கால மாக வழங்கப்படலின் பவணந்தியார் அறியார் என்ற விளக்-கம் ஏலாது. என்னை?

"சாவ வென்னுஞ் செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே"

என்ற தொல்காப்பியனுரும் கூருதே ஒழிந்தார். ஐயாயிர மாண்டுகட்குமுன்னர் இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரும் அறியார் எனில் யாம் வேறென் கூறுவது! இவ்வாறு யாவரும் அறியாத ஒன்றனை யாம் அறிந்தேம் என்று யாதொரு பற்றுக்கோடுமின்றி அன்னையார் வலியுறுத்திச் செல்வது வியப்பாமென்க.

றகரம் தகரமாக மாறும் எனச்சான்றுகள் பல காட்டினு ராலோவெனின் கூறுதும். 'செற்றை' திரிந்து 'செத்தை' ஆயிற்றுப்போலச் 'செற்ருன்' திரிந்து 'செத்தான்' ஆயிற்று எனல், 'கற்றை' திரிந்து 'கத்தை' ஆயிற்றுப்போலக் 'கற்றல' திரிந்து 'கத்தல' ஆயிற்று என்பதுபோலவென்க. இம்முறை பெரிதும் வழுப்படுவது. சொல்லை ஆய்வு செய்யத் தொடங்கு வார் அதன்பொருள் நுட்பத்தை நன்குதேர்ந்து ஆராய்வா ராக. மற்றும் இவர் காட்டியவழக்கு இழிசினர் வழக்காகலின் இலக்கியத்துக் கொவ்வாது என்றுணர்க. என்னை?

"மற்று இழிந்தோர் வழக்கினைப் பிற்காலத்து உயர்ந்தோரும் தகுதி பற்றி வழங்குப வாகலான் அவையும் அமையாவோ எனின் அவை சான்றோர் செய்யுட் குதவாது"

எனவரூஉம் பேராசிரியரின் உரையே "அன்னை" காட்டும் முறை இலக்கிய மரபிற் பொருளற்றதாகும் எனக்காட்டும் மற்றும் 'செற்றான்' என்ற சொற்கும் 'செத்தான்' என்ற சொற்கும் உள்ளபொருள் வேற்றுமையும் 'சாய்' என்ற சொற்கும் 'சா' என்ற சொற்கும் உள்ளபொருள் மாறுபாடும் உணராதே. திரிபெனலும் குறையெனலும் சாலாது என்னை? ஒருசொல் எத்துணைத்திரித்தும் குறைத்தும் வழங்கப்படினும் பொருள்சிறிதும் வேறுபடாதேவரும் "நீலுண்டுகில்", "மரை மலரடி" போன்றவைகாண்க, அம்மரபுப்படி "அன்னை" திரிபென்றுங் குறையென்று நிறுவிய சொற்கள் தம்முதற் சொல்லினின்றும் பொருள்மாறுபடா. ஆகலின் "அன்னை" யார் இன்று தொட்டுசாய்வாக அமைக்கப்பட்ட ஒருவீட்டை "அது சாய்வுவீடு" என்னாது "அது சாவு வீடு" என்றே கூறட்டும். அன்றியும், சாவுநிகழ்ந்த வீட்டைச் சுட்டி" அது சாவுவீடு" என்னாது "அது சாய்வு வீடு" என்றே கூறட்டும். அல்லாமலும் 'இன்னார் செத்தார்' என்னாது 'இன்னார் செற்றார்' என்றே பேசட்டும் எழுதட்டும். புலவர் புன்னகைப்பர் கேட்டார் சினங்கிளர்ந்துநிற்பர். யாமும் தடை யெழுப்பேம்.

இவ்வாறு தாம் கண்ட முடிபால் தமக்கும் பயனின்றால் தமிழுக்கும் வளமின்றால் எனின் அவ்வாய்வு பயனற்றதே யன்றோ? மொழியாலய பயனும் முதல்வனை யுணரும் பேற்றையும் தராது மொழிக்கு ஆக்கம் சாராததன்மை சார்ந்த ஆய்விற் புக்கான் ஒருவனைக் கண்ட சங்கர ஆசிரியர் "பசகோவிந்தம் பசகோவிந்தம் பசகோவிந்தம் மூடாதே" என்று அறிவு கொளுவிச் சென்றார் என்று ஒருகதை வழங்குவதை நாம் நினைவிற் கொண்டு பயனுடைய ஆய்விற்புக்குத் தமிழை வளர்ப்போமாக.

## ரு. மொழியியல்

செறு என்ற சொல் அறு, உறு என்ற சொற்கள் போன் றியங்குவதன்று என மறுத்த உட்கோளை யுணராதே, அவ்வாறு மறுத்தல் மொழியியலுக் கிசைவதன்றெனவும், ஆறு, செறு என்ற சொற்கள் ஒருபாங்கின எனவும் ஒறு, நிறு என்ற சொற்கள் வேறுபாங்கின எனவும் "அன்னை" உரைத்தார்.

இனி, இவர் கூறும் மொழியியல் என்பது தானென்ன? மனிதன் எப்படிப் பேசத்தொடங்கினான்—அவன் நாமுதலில் எப்படியசைந்தது என்ற கற்பனையில் மூழ்குவார் எங்கும் போய்க் கரைகாணாது எறிகடல் வாய்ச் சுழலும் பறவை

போன்ற கற்பனைப் பறவைக்கு ஆய்வென்று பேரிட்டுத் தம்மைத் தாமே பாராட்டிக் கொள்ளும் துறையே மொழியியல் என்றறிக. இலக்கியவின்பம் அறியும் பேறில்லாதாரும் கவிபுனையும் திறனில்லாதாருமே பெரும்பான்மையும் இத் துறையில் புகுவர். இவ்வாய்வாளர் காணும் சோதிட முடிவுகட்கு அரண் செய்வார் இவரும் இவரொத்த ஆய்வாளருமே யலாது மொழியோ இலக்கணமோ சான்றாக அமைதல் கண்டிலம் வேறுதுறைகளில் கட்புலனுக்கும் மதிப்புலனுக்கும் ஒத்த வகையில் ஆய்ந்து புதியன கூறினால்தான் டாக்டர் ஆகலாம். தமிழிலோ அத்தொல்லையில்லை. கூறுவதை மறுப்பாருமில்லை.

எத்துணையோ விஞ்ஞான முறைகளைப் புகுத்திச் சிறந்த ஆய்வு முறைகளைத் தன்னிடத்தே கொண்டிலங்குவது 'துப்பறியுந்தொழில்' எனினும் குற்றவாளிகளைத் தெளிதல் இயலாமல் எத்தனையோ கொலை, கொள்ளை வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அத்துணைச் சிறுமைத்தாய நம் அறிவின் துணைகொண்டு கணக்கிறந்த ஆண்டுகட்குமுன் இச் சொல் முதலில் தோன்றிற் றெனவும் அதனினின்றும் இச் சொல் முளைத்ததெனவும் யாதொரு ஆதாரமுமின்றி அறுதியிட்டுரைத்து மொழிமரபும் இலக்கணமும் முரண்பட வைத்தல் மொழியியல் தனக்கே முடியுமன்றி மொழியறிஞன் மார்க்கு முடிவதின்று. அல்நாசர் கைப்பட்ட கண்ணாடி போன்று இவ்வாய்வாளர் கைப்படடு அருந்தமிழ் வருந்தா வகை சமைத்தியென்று சடையினீர் முடித்தான் திருவடிகளைச் சிந்திக்கின்றேம்.

மொழியியலார்—கால்டுவெல் முதல் இற்றை நாளறிஞர் வரை—கண்ட பிழைபட்ட முடிவுகளைக் காட்டித் தனிக் கட்டுரை வரைவேமாகலின் இத்துடன் அமைகின்றாம்.

### ௬. ஆங்கில மோகம்

இற்றைநாள் புலவன்மார் ஆய்வு நிகழ்த்துங்காலைத் தமிழ்ச் சொற்களை விளக்கப் புக்கு ஆங்கிலச் சொற்களை நக வளைவுக்குள் புகுத்தி அமைகின்றனர். சான்றாக, இறப்பு என்பதை விளக்குமுகத்தான் Death என்ற சொல்லை "அன்னை" யிட்டனர். மற்றும் பெயர்ச் சொல் (Noun), வினை வகை (Kinds of Verb), எழுவாய் (Subject) என்றெழுதுதல் ஏற்றுக்கோ? இஃது மொழியியல் தந்த முன்னேற்றமா? அன்றித் தமிழ்ச்சொல் ஐயமற உணரப்படல் வேண்டுமாயின் ஆங்கிலச் சொல்லே தமிழர்க்கு விளக்கும் தகைமைத்து என்று புலவன்மார் கருதுகின்றனரா? அன்றி, அறிவோம்

ஆங்கிலம் அவனியோரே என்று தம் ஆங்கில அறிவைப் பறை சாற்ற விழைகின்றனரா?

அல்லாமலும் சில்லாண்டுகட்கு முன்வரை தமிழ்ப் புலவரைத் தீண்டாது ஏனையோரைச் சூழ்ந்திருந்த ஆங்கில மோகம், திரு. அண்ணாத்துரையின் தமிழ்ப்பணியால் (அவரது கொள்கைபற்றிக் கூறினே மல்லேம்) பாமரரிடமிருந்து கூட நீங்கிப் பின்போக்கிட மின்மையால் புலவன்மாரைப் பற்றிக் கொண்டதோ? யாம் அறிகிலம்.

ஆங்கிலேயன் நமக்கு உரிமை வழங்கிச் சென்றானெனினும் அவனைப் பரவி அடிமையாகும் அவலபுத்தி மட்டும் நம்மை விட்டு அகலவில்லை போலும். என்னை? "செற்றை" என்ற சொல் இலக்கியத்தில் பல்கால் பயின்றிருப்பவும் அதை எடுத்துக் காட்டுவதே புலமைக்கு அழகு செய்வதாயிருப்ப, அன்னையார், அதனைவிட்டு வினிசுலோவைத் துணைக் கழைத்துத் தமிழில் றகரம் தகரமாக மாறுமென நிறுவ முயலல் காண்க. வினிசுலோ தமிழ்ப் பொதியிலக்கத்திய ரரா? தொல்காப்பியரின் ஆசிரியரா? மதுரைக் கணக் காயனார் மகனார் நக்கீரனாரா? அல்லது தமிழை முற்றுறக் கற்ற முதுபெரும்புலவரா? பன்மொழி யறிஞரெனினும் அவர் தம் தமிழறிவு நுனிப்புல் கறித்ததாகவே முடியும். தமிழ் நாட்டில் பிறந்து தமிழ்ப் பண்பில் வளர்ந்த நாமே தமிழை முற்றுறக் கற்றுத் தெளிதற்கு முடிந்தில தெனின், அயல வரைப் பற்றி யாதுங் கூறல்வேண்டா. அகல வுழுவதினும் ஆழவுழு என்ற முதுமொழியை நோக்குக. இது மொழிப் புலமைக்கும் பொருந்துவது என்றறிக.

"தக்கார் தகவிலரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப் படும்" என்ற குறளில்வரும் "எச்சம்" என்ற சொல்நயம் தேராது அதனை எதுகைநோக்கி "மக்கள்" எனமாற்ற முயன்ற வெள்ளையர் அவர்தம் தீவினையானும் தமிழின் நல்வினையானும் வித்துவான் தியாகராசச் செட்டியாரவர்கள் காலத்தே வாழ்ந்து போந்தார். இப்போது இருந்திருப்பின் மொழியியலார் முன்மொழிய, வித்துவான்மார் பின்மொழிய தங்கருத்தை முற்றுவித்திருப்பார். அயலவர் நம்மொழி பற்றித் தெளிவு பெறுதற்குத் தமிழ்ப்புலவன் மாரைத் தேடுதல் தவிர்ந்து அயலவரை—எத்துணைப் புலமையெய்தி னரே யெனினும் தமிழ்ப்பண்பில் ஊருத்தகைமையால் முற்றுறத்தெளிதற்கியலாத வேற்று நாட்டினரை—அரணெனத் தமிழறிஞன்மார் அவாவும் நிலை வந்துளதென்றால் அந்தோ தமிழன்னையே நீ பெற்றுள்ளபேறுதான் எத்தகைத்து என்று கையறு நிலைதான் பாடவேண்டும்.

# எழுத்துலக முரண்பாடு

## புலவர். தி. நா. அறிவுஒளி

தற்கால எழுத்தாளர்களிடம் ஒருவகைப் புதுநோய் பரவி வருகிறது. இலக்கியத் துறையை 'அரசியலாக்கி' வரும் கொடிய நோயே அது. சிலரை 'மறவழிபாடு' செய்து புகழுச்சிக்கு ஏற்றி விடும் கெடுதி ஒன்று ; தகுதி வாய்ந்த அறிஞரை இழிவு செய்து கீழே தள்ளும் கயமை மற்றொன்று-இவ்விரு இழிசெயலும் வளர்வது தமிழ் மொழி வளர்ச்சிக்கே மிகமிகத் தீமை பயக்கும்.

---

புலவர் பெருமக்களே ! உங்கள் திருவடியிணைகளில் இப் புன்மையேம் சிரம்வைத்து இரக்கின்றேம். ஆங்கில மயக்கத் தினின்றும் இனியேனும் தெளிந்து செந்தமிழிலெழுதி மொழி வளர்ப்பீராக.

எ. முடிவுரை

திரிபிலக்கண முறைப்படி ஒருசொல் எத்துணைத்திரிபுற்றிருப்பினும் தன்பொருளின்றும் வேறுபடலாகாது. 'செற்றான் என்ற சொல்லும் 'செத்தான்' என்ற சொல்லும் பொருளில் பெரிதும் வேறுபடுவன, ஆகலின் திரிபு என்ற "அன்னை"யார் முடிபேதிரிபுடைத்து. 'சாய்' என்ற சொல்லும் "சா" என்ற சொல்லும் பொருள் ஒரோவிடத்துச் சிறிது நுண்ணிய. தன்மையிலும் ஏனையவிடங்களிலும் பெரிதும் வேறுபடுவன. ஆகலின் ",சாய்" குறைந்து "சா" என்ற முடிபே வன்மை குறைந்து போயிற்று. அன்றியும் 'சாய்கிறான்' 'சாய்வான்' என்பதற்கு இக்குறைச்சொல் 'சாகிறான்' 'சாயின்' எனவருமெனக் காட்டலாமெனும் 'சாய்ந்தான்' 'சாய்த்தான்' என்ற இறந்த காலச் சொற்களுக்கு அக்குறைச்சொற்கள் பயன்படாமல் போதலையும் அறிக, இதனானும் இம்முடிபு வலியுறும்

'செற்றான்' என்பதன் திரிபே 'செத்தான் எனக்கொளின் சாகின்றான் என்ற சொற்குக் காட்டலாவதோர் இறந்த காலமின்மையும் காண்க.

சொற்கள் பொருளான் முரண்படுதலும், இலக்கியச் சான்று இன்மையும், இலக்கண மரபோடு ஒவ்வாமையும் "அன்னையாரின் முடிவுகள் பிழைபட்டன; தமிழ்ப்புலவன் மார்க்கு இசையாதன; மரபுபிறழ்ந்தன என்ற உண்மைகளைத் தெளிக்கும் சான்றுகள் என்க.

இதற்குக் காரணம் என்ன? நடுவு நிலையுணர்வும் நேர்மையறிவும் இல்லாமை மட்டுமா? அல்லது பொறாமையா? அன்றிப் புகழ் வேட்கையா? அல்லது எல்லாமேயா?

ஆனால் ஒன்று,

இவர்களின் 'போலி முயற்சி' பாழ்பட்டு வீழ்ந்துவிடும் என்பதில் அணுத்துணையும் ஐயமில்லை.

திறனாய்வாளர்கள் என்று கூறிக்கொள்கின்றவர்களும் இந்தக் குழு மனப்பான்மையினராக விளங்குகின்றனர் பெரிதும் நாணத்தக்கது. 'தூக்கிவிட்டுப் புகழ் பெறுவோர்' சில காலத்துக்குக் 'காசுதேடி' வயிறு வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் இலக்கியத் தகுதி சான்ற படைப்பை ஆக்கியளிக்க அவர்களால் முடியுமா? விளம்பரத்தால் கால வெள்ளத்தை வென்று வாழும் இலக்கியப் படைப்பை ஆக்கியளிக்க முடியாது என்பதை இப்போலித் திறனாய்வாளர்கள் உணரவேண்டும்.

எழுச்சியூட்டும் எழுத்தே படைப்பிலக்கியத் தகுதி சான்றது. ஆர்வ எழுச்சியும், பகுத்தறிவு மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் விளையுமாறு எழுதுபவனே இலக்கிய எழுத்தாளனாவான். அறிவுக்கு விருந்தாகவும் உணர்ச்சிக்கு மருந்தாகவும் அமைவதே சிறந்த படைப்பிலக்கியமாகும். இத்தகுதி 'ஓகோ' என்று கண்மூடிப் புகழ்வதால் மட்டும் ஒரு நூலிற்கு உண்டாக்கி விட முடியாது.

கண்மூடிப் புகழ்வது, இலக்கியத் துறையில் அரசியல் கட்சி நிலையை உருவாக்கி விடுகிறது. இஃது இலக்கிய—அறிவு—வளர்ச்சிக்குப் பெருந் தீங்கு பயக்கும்.

அளந்தபுகழ், நடுவுநிலை ஆராய்ச்சி, தெளிந்த உணர்திறன் இம் முப்பெரும் பண்புகள் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் நனிமிக இன்றியமையாத சிறப்புப் பண்புகளாம். சில ஏடுகள், சில திறனாய்வாளர்கள் நிலைமைக் கேற்பவும், தான் உற்ற உணர்ச்சி நிலைக்கேற்பவும் நூல்களையும், எழுத்தாளர்களையும் உயர்த்திப் பேசுவதோ அன்றித் தாழ்த்திப் பேசுவதோ உண்டு. இது நெறியற்ற செயலாகும்.

நிலையான உண்மைகளை—நிலைபேறுடைய அடிப்படையான உணர்வுகளை, அடைவுகளை, உணர்ச்சித் துடிப்போடு, அழகுநயத்தோடு, இனிய மொழிநடையில் சுவை பொங்க விளக்கும் எழுத்தோவியம் உயிரிலக்கியமாக-ஆற்றல் மிக்க புலமைப் படைப்பாகக் கலைத்தகுதியில் சிறந்து காலம் வென்று வாழும்.

இத் தகுதி சால் நூல்களை ஒரு சிலர் பாராட்டாததா லேயே அவற்றின் தகுதி குறைந்து விடுமா? கலைஞர்கள் இந்நூல்களைப் புறக்கணித்து விடுவார்களா? ஒருகாலு மில்லை.

ஒரு கூட்டத்தார் பொறாமை காரணமாகத் தமக்குப் பிடிக்காதவர் எழுத்தாளர்களைத் தாழ்த்துவதை அறியலாம் குறிப்பாகச் சிலர் நல்ல தனித் தமிழ் நடையில் எழுதும் புலவர்களை நையாண்டி செய்தும் அந்நூலைப் "புலவர் தமிழ்' என எள்ளியும் 'திறனாய்கின்றனர்' (?) இவர்கள் 'முட்டாள் களுக்காக 'முட்டாள் தமிழில்' எழுதுகிறார்கள் போலும்!!

தன் படைப்புக்களின் ஆற்றலிலே உறுதியான தன்னம் பிக்கை உடையவன் பொறாமைப் படமாட்டான்! பிறர் எழுத்தைக் கண்டு வயிறெரிய மாட்டான்!

நடைமுறை உலகைப் படம் பிடித்து காட்டுகிறோம் என்று சில எழுத்தாளர்கள் முழங்கியவாறு' ஆரவாரச் செல்வர்களின் ஆர்பாட்டங்களையும், காமக் கூத்துக்களையும், பயனில் அரட்டைகளையும் விளக்குகின்றனர்! இன்னுஞ் சிலர், 'நகைச்சுவை' என்ற பெயரால் பகுத்தறிவுக்கு முரணான நடை முறைக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகளை யெல்லாம் எழுதித் தள்ளு கின்றனர்; காசு சேர்க்கின்றனர்! இன்னுஞ் சிலர் இழிந்த வாழ்வுக் காட்சிகளைக் கொச்சைத் தமிழில் 'பச்சை' யாகக் காமவுணர்வு கிளர்ந்தெழ விளக்குகின்றனர்! வேறு சிலர் பண்பற்ற—வறிய—இழிவு வாழ்க்கைகளை 'உணர்ச்சி வெறி' யூட்டும் வகையில் தீட்டுகின்றனர்! 'ஒருபாற் கோடிய' இவ் வெழுத்துக்கள் உண்மையான நம் தமிழ் மன்பதையை ஓவிய மாக்கிக் காட்டியதாகாது. இவற்றை' 'முற்போக்கு இலக் கியம்' எனப் பறையறைவது நகைக்கிடமாவதாகும்.

தமிழை முறையாகப் பயிலாதவர்கள் பெரும்பாலோராக எழுத்துத் துறையில் உள்ளனர். இவர்களுக்குத் தமிழிலக் கணமோ, பண்டைத் தமிழ்மரபோ, பண்டைத் தமிழிலக்கிய மோ, தமிழ்ப்பண்போ எதுவும் தெரியாது. அவற்றை அறிய வேண்டுமென்றும் உண்மையாக விரும்புவதில்லை. இப் பேதையர் பண்டை நூல்களைக் கற்பதே புதுத்தமிழ் வளர்ச் சிக்குத் தீங்கு என்றும் முழங்கிவருகின்றனர்! ஆங்கில நூற் களைத் தேடிப்பிடித்துப் படிப்பதும் அவை போல எழுத முயல்வதும்தான் இவர்கள் 'இலக்கியத் தொண்டு!' இவர்கள் எழுத்தில் எவ்வாறு 'தமிழிலக்கியச் செம்மை' கமழும் இவர் களும் தமக்குப் பிடிக்காதவர்களைக் 'கும்பல்' கூட்டிவைத்துக் கொண்டு தாக்குகிறார்கள்!

திறனாய்வில் அச் சுவைஞனின் நேரடியான சுவையுணர்வும்—உள்ளத்தடைவும் புலனாக வேண்டும். பிறமொழி மேற் கோள்களைக் கொட்டிவிடுவது உண்மைத் திறனாய்வாகாது. பிறமொழிகளிலிருந்து மேற்கோள் கூறுவது தவறல்ல; வேண்டியதே. ஆனால், அது அத் திறனாய்வுக்கு உண்மையிலேயே இன்றியமையாததாக இருக்க வேண்டும். தன் சுவையுணர் திறனையும், அதன் பயனையும் புலப்படுத்துவதே திறனாய்வின் முதற் கடமையாகும். தன் படிப்புச் செருக்கைக் காட்டுவதற்காகத் திறனாய்வாளன் பாடுபடக் கூடாது. 'இலக்கியச்சுவை அடைவை' வெளியிடவும், தான் கற்றமுறை, பெற்ற நயம், துய்த்த இலக்கிய இன்பம், அடைந்த அறிவாற்றல், எய்திய உணர்வமைதி, கண்ட அழகுணர்ச்சி ஆகியவற்றைப் புலப்படுத்தும் திறனாய்வே உண்மைத் திறனாய்வு. இவை பொதுள எழுதும் எழுத்தாளரே நல்ல திறனாய்வாளராவர்.

புதிய எண்ணங்கள், கற்பனைகள், மரபுகள், படைப்புகளைத் தமிழர் முழு ஆர்வத்தோடு வரவேற்க வேண்டும். ஆனால் அவை தமிழருக்கும் தமிழுக்கும் இன்றியமையாது வேண்டியதாக இருக்கவேண்டும். தமிழிலக்கியத்தை அப் புத்தாக்கம் மேலும் வளப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

'இதைத்தான் எழுத வேண்டும்' என எதிர்பார்ப்பதும், 'இதைத்தான் எழுதுவேன், என வெறிகொண்டு எழுதுவதும் ஒருவகை அடிமை மனப்பான்மையே. (கொள்கை—குறிக்கோளுக்காக எழுதும் எழுத்தாளர்கள் இதற்குப் புறனடையாவார்கள்; அவர்களை வரவேற்போம்.)

'இலக்கிய மதிப்புள்ள எழுத்தைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் ஓர் எழுத்தாளனுக்கு நேர்மையாக இருக்க வேண்டிய நோக்கமாகும். படிப்போர் இதைத்தான் விரும்புகிறார்கள்; ஆகவே இதையே எழுதுவேன்' என்பவர்களுக்கும் 'காய்கறி வணிகர்களுக்கும் என்ன வேறுபாடு? விலையாகாத பொருளை விற்க வாணிகன் துணிய மாட்டான். அதுபோல எழுத்துக்கலையைச் சந்தையில் விற்பவர்களாக எழுத்தாளர் இருக்கலாமா? எழுதியதற்காகக் 'கூலி' பெறுவது முறையே. ஆனால் கூலிக்காக எழுத்தை விற்பதும்; கூலியே கொள்கையாகக் கொண்டு 'கண்டதை எழுதுவதும் மன்னிக்க முடியாத குற்றங்களே !

எழுத்தாளர்கள் அறிவுப் பண்ணைகள்; அழிவுப் பண்ணைகளல்ல. இதை யாவரும் மறக்கக் கூடாது.

# உயிர்வளச் சிலம்பு

இர. குழந்தைவேலு, எம். ஏ.

ஒருபொருளை உள்ளம் எளிதாய்ப் பற்றுதற்குக் குறியீட்டுச்சொல்லைக் கையாளல் இயல்பு, குறியீட்டுச் சொல்லின் றிக்குறித்த ஒரு பொருளில் நெஞ்சம் ஈடுபடாது எனல்தகும். அங்ஙனமே, மனம் இன்ப துன்ப உணர்ச்சிகளை அடித்தள மின்றி நுகரும்நிலை எய்தல் அரிது, ஆதலான். இலக்கிய நுணுக்கத்தினை அறிவியல் (Science) கண்கொண்டுகாண முற்படுதல் பயனற்றது. அம்முயற்சியால் அங்கு ஊற்றெடுக்கும் நூல் நயத்தைத் துய்த்தல் இயலாது. மேற்குறித்த உணர்ச்சிகளை —இன்ப துன்ப உணர்ச்சிகளைத்—தனித்துக்கூறி மனத்தை ஈர்த்து நிறுத்தல் அத்துணை எளிதாக இயல்வதன்று. நம் நெஞ்சில் அவ்வுணர்ச்சிகள் தோன்றிக் கவர்தல்வேண்டும். பாவலர்தம் எண்ணக்கருவின் உயிர்ப்பு இது, அவ்வுணர்ச்சிகளைக்கற்பவர் மனம் தெளிவாகப் பெறுதற்குத் தக்கநிலைக் களன்களைச்—சூழ்நிலைகளை—உட்கொண்டு தம்மொழியாற்றலால் ஒழுங்குற அமைத்துக் காட்டுவர் பாவரணர். இச் செம்மைத் தமிழ்வழியின் நுட்பங்கண்டவர் இளங்கோவடிகளாவர்.

புலவர்தம் நுண்ணறிவினையொட்டியே அத்தகை காப்பிய நுட்பம் மதிக்கப்பெறும். இவ்வடிப்படையில் இணைந்துநின்று நாடறிந்த இளங்கோவடிகளார் புலமைக்கதிரின் கலைத்திறனறிந்து தேர்ந்து உவப்புறுதல் தகும்.

இந்நிலையில் சிலப்பதிகாரத்தைப் பக்குமா உற்றுநோக்குதல்வேண்டும். சிலம்புக்கதையின் குறிக்கோளாகக் கண்ணகியின் அஞ்செஞ் சீறடிஅணிசிலம்பு அமைந்திருத்தலைத் தெளியலாம். சிலம்பு உள்ளவர்களுக்கெல்லாம் கெட்டகாலம் எனலாம். அவலத்தால் நடுநடுங்கி நிற்கச் சிலம்பின் தீவினைச் செல்வில் நிறைந்த வெந்துயரத்தை அறிவிப்பது சிலப்பதிகாரம்.

அவலமென்பதை நுகர்வார் மனத்தில் படியும் ஓரியல்பு என்று கொள்ளலாம்; உள்ளத்தில் ஊறும் ஒருவகை நிகழ்ச்சி என்று கூறலாம்; நெஞ்சக் குறிப்பின் ஒரு கூறு என்று குறிக்கலாம். அந்த நினைவு அலை—துன்ப உணர்ச்சி—விரைந்து விளக்கமின்றிக் கரைந்து தளரும்; கலைந்து அகலும்.

இங்குச் சிலம்பால் முளைத்து முற்றிய துன்பத்தின் கொடுமையைக் காட்டிக் கற்பவரை அவலப்படுத்துவது

இளங்கோவடிகளார்க்கு நோக்கமன்று; அவலத்தின் இடையே வாழ்வைவளர்த்துப் பண்படுத்திக் காக்கும் கலை இன்பத்தை மனம் குளிர்ந்து இனிப்ப விளக்குவது நோக்கம், சிலம்பு உலகத்தில் பொங்கும் துன்பத்தை மாற்றுவது கலைநல்கும் சுவை எனலாம்.

கோவலனுக்குக் கண்ணகியால் தீராக்காதலால் மகிழ்ச்சி பொங்குகின்றது. கண்ணகிக்கும் அவளிடத்து அன்பு நிறைந்தது. அவளிடத்துக் கனிந்த பெண்ணலத்தை மதித்து,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகர் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால்" (காதை 2; வரி: 73—80)

எனப் பலைத்துணையாகப் புகழ்ந்து கண்ணகி உவப்பக் கூறலாயினன். இவ்வண்ணம் காதலின்பஞ் சிறக்கவிருந்த இளமைக்கோவலனை,

"மறப்பரும் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண" (2: 85—87)

நசைபட்டனர் தாய்தந்தையாரை், அவர்தம் நெஞ்சிற்குடி கொண்ட கொள்கையினைத் தினைத்துணையாக மதித்தான் கோவலன்; வாய்த்தகாலச் சூழலால் அதனைக் காக்குங் கடன் பிழைபட விலக்கி அறங்கடந்தான்.

பிறளொருத்தி மாதவி தன்னொடு இல்லறத்தான் கோவலன் மயங்கி விடுதலறியா விருப்பினனாயினன்; மாதவி தன் காதற்சுவையைப் பெரிதும் நயந்த நயப்பால் வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தான்; அவனைக் கலைவாழ்வு இங்ஙனம் தடுத்து நிறுத்தியது; அவளிடத்து உள்ளம் மடங்கினன். அம்மறதி அவன் வாழ்குடியின் புகழைக் கொன்றது.

தன் நெஞ்சிற் பிறள் புகுதற்கு மனமுவந்த கோவலன் நெறி பிறழ்ந்ததைக் கருத்திற்கொண்ட கண்ணகி அறிவு கலங்கவில்லை; உரிமை இன்பப்பிழையால் இல்லறப் பிழை கண்ட அவன் புகழ்க்கு இழுக்குக் கற்பிக்க முனைந்து முந்த

வில்லை. அவன் அன்பும் ஒருநாள் தன்னிடத்து நிறைந்து இனிமையால் கனிவிக்கும் என்பது கண்ணகி நெஞ்சிற் பதிந்த நம்பிக்கை.

கலையுலகில் களித்துத் திளைத்த மாதவியொடு இன்புற்ற கோவலன்பால்,

"கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினளென"

(7 : 52)

பொருமையிலை பூத்தமையால் பொறுமை எல்லைதாண்டியது' அவனிடத்துப் பொழிந்த அன்பிற் குறைவு உண்டாயிற்று; காதலாற் பிணிப்புண்டு அவன் காதலையே எண்ணி உருகிய மாதவி உயிரகத்தே அழுகையால் பிரிவு பொருது,

"நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்"

(7 : 32)

என் ஏங்க, ஒன்றைப் பிறிதொன்றாக நினைத்த திரிபுணர்ச்சியால் வெறுத்துத் துறந்தான். அக்கலையரசி உவப்பத்தலைக் கூடி உள்ளப் பிரிந்த கோவலன் தன் மனை நாடிப் புகுந்தான்; தன் பைந்தொடி கண்ணகியின் வாடிய மெய்யும் வருத்தமும் கண்டான்; மயக்கொழிந்து,

"யாவுஞ்
"சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்"

(9 : 68—71)

என்றுதன் நெஞ்சத்திறப்பால் நிகழ்ந்தது வெளிப்பட மொழிந்தான்.

கண்ணகி நம்பிக்கை மலர நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டினள்; தன் கொழுநன் குறிப்பறிந்து தொலைந்த பொருளின் தளர்ச்சியைப் பிரித்து நலப்படுத்தும் எண்ணத்துடன்.

".சிலம்புள கொண்ம்"

(9 : 73)

எனக் குறுக உரைத்தாள். இங்ஙனம் இல்லறமகள் தற்கொண்டானின் தகைசான்ற குறிப்புச் சொற்காத்தாள்.

வளஞ்சேர்க்க விரைந்த கோவலன்,

"சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுக"

(9: 74—77)

எனக் கண்ணகிக்குச் சொல்லி, அடைக்கலத்தாய் மாதரி யார் கண்ணகியை அடைக்கலந் தாங்க,

"சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிக"

(16: 92—93)

எனச் சிலம்புகளுள் ஒன்றனை விற்றுவரப் புறப்பட்டுக் காதலி தன்னை,

"ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ணன் ஆகி" (16: 96—97)

அக்கோவலர் இல்லம் நீங்கினான்.

அப் போற்றருஞ் சிலம்பு தீதுதீர்மதுரையில் பொய்த் தொழிற் கொல்லன் துணைநிற்க,

"கல்லாக் களிமக னொருவன் கையில்
வெள்வள் எறிந்தனன் விலங்கூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்துயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன்" (16: 212—17)

என்ற துன்பத்தின் கொடியநிலையில் அவன் உயிரை வாங்கியது; அவனுடன் மதுரைச் செலவில் கலந்து அவன் "துயர் களைந்த" (16: 88) கண்ணகிக்கு நடுங்குதுயரூட்டியது; "சீறடிச் சிலம்பினொன்று கொண் டியான்போய் "மாறி வருவன்" (16: 92—93) என்று மயங்காது மொழிந்தவனைக் கொலைப் படுத்திப் புண்ணுமிழ் குருதிநீர் பரப்ப உயிர்வாழா உடலாய் மாற்றி, வாராது மடியச் செய்தது; 'மயங்கா தொழிக' (16: 93) என்னும் கொண்டவன்தன் கூற்றுப்படி நிற்கத் துணிந்தவளை,

"தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ"

(18: 20—23)

என மயங்கச் செய்தது; பொன்னின் மாசு நீக்கும் "பொன் வினைக் கொல்லனை"த் (16: 110) தன் வினையால்—செயலால்

கோவலக் கொல்லனெனக் கொள்ளும் வண்ணம் அவனுக்குச் சிறப்பு இழிவினைத் தந்தது; "ஒருதனி கண்டு தன் உள்ளகம் வெதும்பி, வருபனி கரந்த கண்ணகி"ய )16: 96-97) காதலி இழக்காக் கோவலன் பிரிவில் கண்ணகியைக் கலக்க முறுத்தி அல்லலுற் றுற்றுது அன்பனை இழந்த தனிமையில்,

"செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை
எங்கணு என்ணு இனைந்தேங்கி" (18: 32—33)

அவலநீர் வடிக்கச் செய்தது; சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு பொருளீட்ட விழைந்தவன் ஈட்டா முன்பு—முதன் முதலில்—வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்"கு (புறம்: 230) அவன் உயிரைத் தேய்த்தது; காலையில் தன் கணவன் அணிந்த பூமாலையைத் தனது கூந்தலிடத்துச் செருகிக் கொண்டவளை மாலைப் போழ்திலிருந்து தேனொடு திகழும் மலர்கள் தரும் இன்பத்தை என்றும் வாழ்நாளெல்லாம் விலக்கி அருங்கேடு எய்த,

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்.
கண்டாள் அவன்றன்னைக் காணுக் கடுந்துயரம்"
(19: 35—38)

என்னும் நெஞ்சத்திற்கு மீறிய அவலநெஞ்சத்தினளாய் நோகச் செய்தது.

இறைமுறை வழுவப் பிழைத்தோன் வாயிலினின்று முறையில் தப்பாது நீர்வார் கண்ணொடு மன்னனைக் குறுகிய கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைத்தகாலை, முன்னர்த் தெளியாத மன்னவன் வாய்முதல் தெறித்த மணி,

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யாஞே அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னுயுளென
மன்னவன் மயங்கிவீழந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி"

எனச் சாய்த்தவண்ணம் கிடத்தி இணையுயிரும் தெறித்து நழுவக் கொன்றது

இத்துணையும் தொகையாகக் காணப் பெருக்கெடுக்கும் அவலத்தால் நம் நெஞ்சம் நினைகிறது. வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்த கோவலன் நாணுடைமையுடன்

# கலங்கரை வெற்றிச் சின்னம்

## புலவர்- கோவிந்தராசனார்

தஞ்சை மாவட்டத்தின் தென்கிழக்கு எல்லைப்பகுதியாகும் பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள பேராவூரணிக்குக் கிழக்கே கடற்கரையை நோக்கிச் செல்லும் சாலைவழியே பத்துக்கல் அளவில் செல்லுவோமானால் மனோரா என்று அழைக்கப்படும் கலங்கரைச் சின்னத்தினைக் காணலாகும்.

இந்தியப்பெருநாட்டில் பண்டைய அரசர்களால் எழுப்பப்பட்ட வெற்றிச் சின்னங்களும், பிற நினைவுச்சின்னங்களும், பலவாகும். அவற்றுள், தமிழகத்தில் சோழமண்டலக் கடற்கரையில் விளங்கிய துறைமுகப் பட்டினங்களுள் ஒன்றாக விளங்கியது, பட்டுக்கோட்டை வட்டத்தின் கிழக்கு எல்லையாகும் கடற்கரையில் இன்றும் பெயரழியாது உள்ள மல்லிப் பட்டினமாகும். இப்பகுதியைச்சார்ந்து தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் விளங்கிய சாளுவநாயக்கன் பட்டினத்தில் கட்டப்பட்டுள்ள எழுநிலைமாடம் வெற்றிச் சின்னமாகக் கட்டப்பட்டுள்ளது.

கி. பி. 1814—ஆம் ஆண்டில் நெபோலியனை ஆங்கிலேயர் வெற்றிகொண்டதற்கு நினைவுச்சின்னமாக, தஞ்சை சரபோசி

---

முன்னைய இல்லறம் வாடாது மலர்ந்து மணக்கச் செய்ய உறுதிபூண்ட பெரும்புகழ் கூட்டும் விருப்பமெல்லாம் இங்குக் கருதல் பயனாக அத்துயரம் பொங்கி எழுந்து நைந்துருகச் செய்கிறது. இங்ஙனம், அவலப்படுங்கால் துன்பத்தால் நனைந்த நெஞ்சம் அழுகையை உரமாகத் தழுவி, அவ்வுணர்ச்சி வெளியீடு பெறப் -போக்குவீடு பெற—வழிப்படுத்தி நிலையுற்று அமைதியுறுகிறது. அமைதியுறுதலால் உள்ளத்தின் வளம் பெருகி மனம் விழிப்புப் பெறுகிறது. உள்ளத்தின் வளம் ஓங்க உயிர்வளம் உயர்கிறது; அகவாழ்வு பண்படுகிறது; புறவாழ்வு சிறக்கிறது.

முதிர்ந்த வாழ்க்கை அடைவால் இலங்கோவடிகளார் இவ் வுண்மைப் பொருளைக் கருத்திற்கொண்டார்; சிலம்பு விளைக்கும் அவலத்திடையே தம் கலையுள்ளத்தால் சிலப்பதிகாரத்தால் அழுகையைச் சுவையாகப் போற்றும் அடிப்படை உயிர்வள நுட்பம் பூத்து ஒளிபெற உள்ளுறுத்தி விளக்கலாயினார். இது சிலப்பதிகாரத்து எண்ணத்தகும் உயிரோட்டம்.

மன்னரால் இந்த எழுநிலைமாடம் கட்டப்பட்டது. இதனை 'மனோரா' என்று அழைக்கின்றனர். மனோரா என்ற சொல்லுக்கு வெற்றிக்கோபுரம் அல்லது வெற்றியின் சிகரம் என்று பொருள் கூறுவர்.

கி. பி. 1798-ல் மராட்டிய மன்னர் வழியில் தஞ்சையில் புகழ்நிறுவிய சரபோசி மன்னர், பாக் வளைகுடா (Bay of Palk) என்று அழைக்கப்படும் பட்டுக்கோட்டையின் கிழக்கு எல்லையாகும் வளைகுடாக்கள் நிறைந்த கடற்கரையில் தொன்மையாகவே அமைந்திருந்த இயற்கையான துறைமுகத்தை நன்முறையில் அமைத்து, காத்துவந்துள்ளார். இப்பகுதியில் முத்துச்சிப்பிகளும் வளர்ந்து கடல்வளம் தந்தமையால் மராட்டிய அரசுக்குரிய வருவாய் தரும் பகுதியாகவும் இப்பகுதி இருந்திருக்கின்றது. இச்செய்தியினை, இப்பகுதிக்கு அண்மையில் உள்ள முத்துப்பேட்டை என்னும் முத்து வணிகத்திற் சிறந்திருந்த ஊரின் பெயரைக்கொண்டும் உணர்தற்காம். மற்றும், இலங்கைத் தீவிலிருந்து குறுகிய கடல்வழியாகத் தமிழகத்திற்கு வரும் கடல்வழித் துறைகளில் இப்பகுதியும் ஒன்றாகும். இவ்வாறு, தஞ்சை அரசுக்குரிய பகுதிகளுள் சிறந்ததாக இப்பகுதி அமைந்திருந்ததினாலேயே நாயக்கமன்னர் காலத்தில் சாளுவநாயக்கன் பட்டினம் என்றும், பின்னர் மராட்டிய மன்னர் காலத்தில் சரபேந்திர ராசபட்டினம் என்றும் பெயர் பெறுவதாயிற்று.

இங்குத் துறைமுகமொன்று இருந்திருக்கின்றது என்பதையும், பிறநாட்டு வாணிபம் சிறந்திருந்தது என்பதையும், இடிபாடுண்டு கிடக்கும் பண்டகசாலைகளைக் கொண்டும், சிதைந்து கிடக்கும் பிற சின்னங்களைக்கொண்டும் அறியலாகும்.

மல்லிப்பட்டினத்தில் பழையகாலத்திலிருந்து நிறுவப்பட்டிருந்த கப்பல் கட்டும் தொழிற்கூடம், மராட்டிய மன்னர் காலத்திலும் புழக்கத்தில் இருந்திருக்கின்றது. இத்தொழிற்சாலையில் கட்டப்பெற்றதும், மராட்டிய மன்னர்கட்கு உரிமையானதுமான, இராமபிரசாத், மகாதேவபிரசாத், கணேசபிரசாத், ராசலெட்சுமி, மீனாட்சி, என்னும் பெயர்களோடு கூடிய மரக்கலங்கள் கடலோரப் பட்டினங்களுக்குச் சென்றுவரும்.

சரபோசி மன்னரும் இப்பகுதியை தமக்குரிய இன்பச் செலவிடமாகக் கொண்டிருந்திருக்கிறார். இவ்வாறு சரபேந்திர ராசபட்டினம் சிறந்திருந்ததினாலேயே இங்கு மனோரா என்னும் வெற்றிச்சின்னம் கட்டப்பட்டிருக்கின்றது.

ஆறுகோணவடிவில் அமைந்த 'கோட்டையின் நடுவே மனோரா உயர்ந்து எழுந்துள்ளது. கோட்டையின் ஒருபுறம் கடலும் அதில்வந்து கூடும் பாம்பன்கண்ணி ஆறும் எல்லையாக அமைந்துள்ளன. கோட்டையின் வாயிலை அடைய வெளியி லிருந்து இரண்டு சாலைகள் புறப்பட்டு ஒரே அளவில் நெளிந் தோடிவந்து வாயிலில் கூடுகின்றன. வாயிலின் முன்னும் பக்கங்களிலும் வீரர்கள் இருந்து காவல் செய்யும் பாசறைகள் உள்ளன. கோட்டையின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள அகழியும் அறுகோணமாகவே கோட்டையின் அமைப்புக் கேற்ப அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அகழியில் கடல் நீரையே நிரப்பி இருந்திருக்கிறார்கள். அதற்காக அமைக்கப் பட்டுள்ள பாய்காலும் வடிகாலும் கண்டார்வியக்கும் மூடு பலகைகளினால் இயக்கப்பட்டுள்ளன. இவ்வகழி பதினைந்தடி அகலமும் பன்னிரண்டடி ஆழமுமாகவே உள்ளது. இவ்வகழி யைத்தாண்டி உள்ளே செல்லும் தலைவாயிலிலும் பின்புறமும் இரும்புச் சங்கிலிகளால் இயங்கக்கூடியதும், அகழியைத் தாண்டுவதற்குரியதுமான மடக்குப் பாலங்கள் இருந்திருக் கின்றன. பாலத்தைக்கடந்து உள்ளே செல்லின் வெடிமருந்து களும், போர்க்கருவிகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்த வலிமை மிக்க அறைகள் சூழ நடுவே எழுந்துள்ளதே மனோரா என்னும் எழுநிலை மாடமாகும். சைனு, ஜப்பான் ஆகிய நாடு களில் உள்ள பௌத்தமதக் கோயில்களின் மாடவரிசையின் அமைப்பைப் பின்பற்றியதாகவே மனோரா எழுப்பப் பட்டுள்ளது.. ஆறுபட்டையுடன் வானளாவி எழுந்துள்ள மனோரா பதினொரு வரிசையுள்ளதாக இருக்கின்றது. என்று பழைய குறிப்புக்கள் கூறுகின்றன. தரைமட்ட அறையும், பக்கப் படிகளோடு கூடிய அதன் மேலறையும் அடிற்தளமாக அமைய, மேல் அறையிலிருந்து மரப்படிகளினால் இணைக்கப் பட்டுள்ள மேல் நிலைமாடங்கள் ஏழு தொடர்ந்து உயர்ந் துள்ளன. ஆக ஒன்பது பகுதிகளே காட்சிக்கு உரியதாக இருக்கின்றன. பதினொன்று என்னும் குறிப்பினால் தரையின் கீழுள்ள அடிப்படை வரிசையுள் ஒன்றின்கீழ் ஒன்றாக இரண்டு நிலவறைகள் உள்ளனபோலும்! மனோராவின் உச்சி திறந்த அறையாகும் இங்கு இரும்புக் கொப்பரை ஒன்று பதிக்கப் பட்டிருந்ததாம். கொப்பரையில் ஏற்றிய எண்ணெய் விளக் கொளி, கலங்கரை விளக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த தென்பதை இதனால் அறியமுடிகின்றது.

இவ்வாறு துறைமுக விளக்குமாடமாகவும் பயன்படுத் தப்பட்டிருந்த இச்சின்னம், ஐரோப்பாவில் கி. பி. 1814—ல் நிகழ்ந்த வாட்டர்லூ போரில் ஆங்கிலேயர் நெப்போலியனை வெற்றிகண்டதற்கு அறிகுறியாகவும், தாம் ஆங்கிலேயரிடத்

தில் கொண்டிருந்த நட்புக்கு இலக்காகவும் தஞ்சை மராட்டிய மன்னர் சரபோசி அவர்களால் எழுப்பப்பட்டுள்ளது என்பதை, ஆங்கிலம் தமிழ் மராத்தி உருது, முதலிய மொழிகளில் வெட்டப்பட்டு ஆங்காங்கு பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

**ஆங்கிலத்தில் :—**

His Highness Maharaja Sirfojee .Rajah of Tanjore, The Friend and Ally of Bristish Covern ment, Erected this Column To Commemorate, The Triumphs of The Bristish Arms and the Downfall of Bonapart. 1884.

என்றும்,

**தமிழில் :—**

இங்கிலிசு சாதியார் தங்கள் ஆயுதங்களினாலடைந்த செய சந்தோஷங்களையும் போனபாற்தெயின் தாழ்த்தப் படுதலையும் நினைவு கூர்த்ததாக இங்கிலீசு துரைத்தனத்தின் சினேகிதரும் படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசா சத்திரபதி சரபோசி மகாராசாவவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டிவைத்தார்கள் ”

சகம் —௲எளஙசு௵

(சகம்—1736—வருடம்)

என்றும் கல்வெட்டுகளில் உள்ளன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புடன் பழைய மல்லித் துறைமுகத்தைச் சார்ந்து விளங்கிய சரபேந்திரராச பட்டினத் துறைமுகம் காலவெள்ளத்தால் அழிந்து போயினும் மனோரா எனப்படும் கலங்கரை வெற்றிச்சின்னம் இன்றும் உள்ளது.

மனோராவின் தலைவாயிலுக்கு வரும் சாலைகளுக்கு முன்னர் அமைந்துள்ள மேடான இடத்தில், செங்கற்களைக் கொண்டு உயர்ந்த மேடையொன்று அகன்றதாக அமைக்கப்பட்டுள்ளது. கீழ்மேலாக நீண்டுள்ள இம்மேடையின் மேலைக் கோடியில் சிவலிங்கம் ஒன்று உள்ளது. அதற்குமுன்னர் யாக சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கொண்டு ஆராயின், இங்கு சிறந்த முறையில் கடவுள் வழிபாடும் யாகங்களும் நடந்திருக்கின்ற தென்பது புலனாகின்றது. வழிபாட்டில் சிறந்த சரபோசி மன்னர் கப்பல்கட்டும் நிலையத்திலிருந்து உருவான கப்பல்களை கடலில் மிதக்க விடுவதற்குரிய வழிபாட்டுச் சடங்குகள் பல செய்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

இப்பகுதியில் அக்காலத்தில்ஒரு சித்தவைத்திய சாலை யும். கப்பல்கட்டுதல் கடலோடுதல் ஆகிய தொழில் துறைகளை விளக்கும் நூல்களடங்கிய சுவடிச் சாலையும் இருந்து அழிந்து விட்டது என்கின்றனர். துறைமுகக் காப்பாளர், கோட்டைக் காவலர், கடலோடிகள் கப்பல் கட்டும் தொழிலாளிகள் ஆகி யோருக்குத் தனித்தனி அடையாள முள்ள தலைப்பாகையும், உடைகளும் இருந்தனவாம். துறைமுக இலச்சினைக் கொடி களும், செய்தியுணர்த்தும் அடையாளக் கொடிகளும், தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு சைகை முறையில் பயன்படுத்தப் பட்டிருந்தன என்றும் கூறுகின்றனர். இவைகள் ஒன்றும் இன்று இல்லையாயினும் மனோரா எனப்படும் கலங்கரைச் சின்னம் மட்டும் வானளாவி நின்று தன் எழிலையும் கதையை யும் நமக்கு உணர்த்து கின்றது.

இன்று இச்சின்னத்தின் அங்கமான அகழி புதரடைந்து கிடக்கின்றது, கோட்டைக் கொத்தளங்களில் முட்புதர் நிறைந்துவிட்டன. பறவைகளால் வித்திடப்பட்டு வளர்ந்து அடிப்படைக் கற்களையே அசையச் செய்துள்ள ஆல் அரசு மரங்கள் ஆங்காங்கு காலிட்டுள்ளன. பளபளப்பான முறையில் சுண்ணும்புக் கலவை செய்தரைத்து பூசப்பட்டு, மனோராவின் மாடங்களை அழகு செய்யும் காரைப் பூச்சினை அங்கு வருபவர் பெயர்த்துப் பெயர்த்து பல பகுதிகள் மூளியாகி வருகின்றன. அதில் நாளும் எழுதப்படும் செய்திகளும் முகவரிகளும் மிகப் பலவாகும். உப்பரிகை மாட மொன்றின் வாயில் மேல் நிலைச்சட்டம் தென்னை நார் கயிற்றால் சுற்றப்பட்டு மேல்சாந்து பூசப்பட்டிருந்திருக்கிறது, அதனை மக்கள் பலவாறு அகழ்ந்து சிதைத்து வருகின்றனர். இவ்வாறு இன்று சின்னா பின்னப் பட்டு வரும் மனோராவை பழம் பொருள் பாதுகாப்புக் கழக மல்லாமல் வேறு யாரால் காத்தற்கியலும். இந்நிலை நீடிப்பின் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் மனோரா தன்னிலையிற் சிதைந்து பல இல்லங்களாகவும் இடமாறிப் போதற்காம்.

பண்டைப் பெருமக்கள் உண்டாக்கிக் காத்த இத்தகைய பழம்பொருள் சின்னங்கள் இன்றும் என்றும் மக்கள் கண்டு பழமையை உணர்ந்து மகிழ்தற்குரிய நிலையான உடைமை களாகும்.

—:●:—

# காலத்தை வென்றவர்

ஏ. கே. பெருமாள் எம். ஏ.
(தமிழ் விரிவுரையாளர்)

"I will make thee famous by my sword;
I will make thee glorious by my pen"

இங்கிலாந்தை அழைத்து இப்படிக் கூறினான் ஒரு கவிஞன். வாளும் எழுதுகோலும் அந்த நாட்டுக்கு வளமான புகழைத்தந்தன. அவற்றுள்ளும் எழுதுகோலே இங்கிலாந்துக்கு இணையற்ற புகழை அளித்தது எனலாம். ஆங்கில மொழி பெற்றிருக்கும் இலக்கியச்செல்வம் அளவற்றது; பரந்த நாடக இலக்கியஉலகில் ஷேக்ஸ்பியர் நந்தா விளக்காக ஒளிர்கின்றார். இங்கிலாந்தின் பெறற்கரும் செல்வமாக சேக்ஸ்பியர் இலங்குகிறார். கார்லைல் கூறியதற்கேற்ப, இந்தியப்பேரரசை இழந்தும் இங்கிலாந்து இன்றுவாழ்கிறது. ஷேக்ஸ்பியர் இன்றிஅது சிறக்க முடியுமா என்பது ஐயமே. அத்தகுபெருமகனின் நானூறாவது பிறந்தநாள் விழாவை அண்மையில் அகிலமே சிறப்பாகக் கொண்டாடிற்று கொண்டாடியும் வருகிறது.

பெரு மகன்ஒருவரைப் பெருமைப்படுத்த, அவர்புகழை மேடைகளில் முழங்குகின்றோம்; எழுத்துக்களில் வடிக்கின்றோம். ஆனால் வெறும் வாய்ச்சொல்மட்டுமே அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகாது. புகழ்ந்து பேசுவதோடும் எழுதுவதோடும் நாம் நின்றுவிடக் கூடாது, அவர் தம் நூல்களை ஆழ்ந்துபடிக்க வேண்டும்; அவைகளினின்றும் வாழ்க்கை ஆக்கம் பெறும்வகையில் பயனடையவேண்டும். ஈண்டு சாமர்செட்மாம் என்னும் அறிஞர் கூறியிருப்பது கருதத்தக்கது, "கடந்த காலத்தில் வாழ்ந்த பெருமக்களுக்கு வெறும் மரியாதை கொடுத்தல் என்பது உண்மையான அஞ்சலியாகாது. அவர்கள் நம் சமகாலத்தவராயின் எவ்வளவு நெருங்கிப் பழகுவோமோ அதுபோல் அவர்களோடு நெருங்கியதொடர்பு கொள்வதே அவர்களுக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்". எனவே சேக்ஸ்பியருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலி அவர்தம் நூல்களில் ஆழ்ந்த பயிற்சி கொள்ளுதலேயாம். இது தமிழ்நாட்டுப் பெருமக்களுக்குப் பொருந்தும். வள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்றோரின் பண்பை எடுத்துரைத்து மரியாதை செய்தலோடு நம்கடமை முடிவதில்லை. அவர்தம் நூல்களில் ஆழ்ந்த பயிற்சி பெறுதலே நாம் அவர்களுக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

சேக்ஸ்பியரிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல இருக்கின்றன. வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் அவர் தன் கைவண்ணம்—நாவண்ணம் காட்டிப் பலப்பல அனுபவங்களை வழங்குகிறார். உலகம் பலவேறு இயல்புகள் கொண்ட மாந்தர்களை உடையது. அந்த மாந்தர்களின் பல்வேறு உணர்ச்சிகளையும் அழகுறச் சித்தரித்திருக்கின்றார் ஆங்கிலக் கவி.

அவர் தம் நாடகங்களில் 1217 பாத்திரங்களைச் சந்திக்கிறோம். அவர்களில் 157 பாத்திரங்கள் பெண்கள். நாடகப் பாத்திரங்களைப் படைத்து நடமாடவிட்ட அந்த நாடக மேதைக்கு உலகமே ஒரு நாடக மேடையாகத் தோன்றுகிறது. அவரின் "விரும்பியவண்ணமே" என்னும் நாடகத்தில் "உலகம் யாவும் ஒரு நாடகமேடை; எல்லா ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்கள்" என்று கூறுகிறார். ('All the world is a stage; And all the men and women merely players" As your like it) உலக வாழ்வுக்கு நாடகவாழ்வை ஒப்புக்கூறுதல் தமிழகத்திற்குப் புதுவதன்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இத்தகையதொரு கருத்தைப் புறநானூற்றில் காணுகிறோம்.

"கோலுயர் நீர்மை போல முறை முறை
ஆடுநர் கழியும் இவ்வுலகம்"

என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் கூறுகிறார். கூத்தர்கள் பல்வேறு வேடம்பூண்டு நடிக்கும் தன்மைபோல் உலக மக்கள் முறைமுறையே தோன்றிவாழ்ந்து மறைகின்றார்கள். உலகை நாடகமேடையாக உருவகப்படுத்திய ஷேக்ஸ்பியர், மேலும் தன் 'மாக்பெத்' நாடகத்தில்,

"Life is but a walking shadow, a poor player
That struts and frets his hour upon the stage
And then is heard no more" —(Macbeth)

என்று வலியுறுத்திக் கூறுதல் கருதத்தக்கது. உலகில், பெருமக்கள் சிந்தனை, ஒன்றாகவே இருக்கும் என்பதற்கு இது நல்லசான்று.

அரசாட்சி என்பது அதிகப் பொறுப்பு வாய்ந்த பணியாகும். முடியரசு நிலவிய அக்காலத்தில் மோலி கவித்தவன் அரசபாரத்தைப் பெரும் இன்னல்களுக்கிடையே சுமக்க வேண்டியிருந்தது. மனநிம்மதி இன்றிப் பகைபல நீக்கித் தன் மகுடம் காத்து மக்களைப் பேணவேண்டியிருந்தது. அவன் வாழ்வில் எப்போதும் கவலையே ஆதிக்கம் செலுத்திக்

# அன்பு மடல்கள்

வெண்பாவூர், பொ. திருஞானம்

மடல்கள் என்றுசொல்லும் போழ்து எத்துணையோ விதமான மடல்கள் உள. எனினும் ஈண்டு நாம் காணப் புகும் மடல்கள் அன்பு மடல்களே! காதல் கடிதங்களே! இக்கால மடல்களா என்றால் இல்லை. அக்காலத்திய அன்பு மடல்களே! (Love Letters) காதல் கடிதங்களே! ஈண்டு நாம் அறியப் போவது அவ்வகைத்தே!

முதற்கண் அன்பு என்பதும் காதல் என்பதும் ஒன்றே! காதல் என்பது ஆண் பெண் இருவரும் அறநெறியிற் சிறிதும் பிறழாது இன்பங்காணும் குணமே யாகும். காதல் வேறு; காமம் வேறு. காதல் என்பது இன்பதுன்பங்களில் ஆடவரும் பெண்டிரும் இரண்டறக் கலந்து இன்ப வாழ்க்கையை இனிது நடத்திச் செல்வதே யாகும். காமம் மிக இழிந்த நிலையில் நிகழ்வது. காதலுக்குரிய பண்பினின்று மாறாக நிகழ்வது ஆகும். எஞ்ஞான்றும் காதலரிருவரும் கருத்தொருமித்து—ஆதரவு பட்டதே இன்பம் ஆகும்.

ஆடவரோ மகளிரோ ஒருவர்பாலொருவர் மேற்கொள்ளும் புனிதமான காதலே சிறந்ததாகும். 'காதல் தோன்றுவதற்கு முதலில் அகத்தைச் சுண்டி இழுப்பன உடல் வனப்பு, அன்பு, அறிவு, பார்வை, ஆடை அமைதி, கூந்தலழகு ஆகியனவே யாகும். காதல் கனிந்துவிடின் இல்வாழ்வு தொடங்க முற்

---

கொண்டிருக்கும். ஆகவேதான் சேக்ஸ்பியரும், "நான்காம் ஹென்றி" நாடகத்தில் "மகுடம் தரித்தவனை மனக்கவலை சூழ்கிறது" என்று கூறிச் சென்றார்' (uneasy les the head that wears the crown) இந்நிலை, குடியாட்சி நிலவும் இக்காலத்திலும் அமைச்சப் பொறுப்புக்கள் வகிப்போருக்குப் பொருந்தும். இளங்கோவடிகளும் சிலம்பில் செங்குட்டுவன் வாயிலாக

"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பமல்லது தொழுதகவில்"

எனக் கூறியிருப்பது ஒப்புநோக்கி இன்புறற்பாலது.

மலர் எங்குப் பூப்பினும் மணக்கத்தான் செய்யும்; விழைவார்க்கு இன்பமும் பயக்கும். சேக்ஸ்பியரும் அப்படியே. அவர் ஒரு காலத்திற்குமட்டும் உரியவரல்லர்; எல்லாக்காலங்களுக்கும் உரியவர். ஆம். அந்த ஆங்கிலக்கவி காலத்தை வென்றவர்.

"He was not of an age, but for all Time"

படுதலில், விழைதலில் தவறில்லை அதற்குத் தடையேதும் நிகழின் உயிரினையும் கொடுக்கும் தன்மை காதலுக்கு உண்டு.

காதல் என்ற பண்பு பொதுவாக யார் மாட்டு இருப்பினும் இருபிரிவாக இயங்குகின்றது, ஒன்று காதலர் கூட்டம் நிகழ்வதற்கு முன் நிகழ்வது. மற்றொன்று காதலர் கூட்டத்திற்குப்பின் நிகழ்வது. இவற்றை வடமொழிப் புலவர் காளிதாசன் தாமியற்றிய சாகுந்தலம் என்ற நாடகநூலிலும், செந்தமிழ்மொழியில் இளங்கோவடிகள் தாமியற்றிய சிலப்பதிகார நூலிலும் நாம் நன்கறியலாம். முதற்கண் காதலர் கூட்டம் நிகழ்வதற்கு முன் நிகழ்ந்ததைச் சற்றிவண் அறிவாம்.

துஷ்யந்தன் என்னும் இளவரசனைக் கானகத்தில் கண்டாள் கன்னிப் பெண் சகுந்தலை. கண்டவன் காமமுறவில்லை· அதற்குப் பதிலாகக் காதலுற்றாள்; தூய்மையான அன்பு செலுத்தினாள். அவனைக் கண்ட ஞான்றே அவள் நெஞ்சம் அவன்பால் சென்றது. அரசனுக்கு எவ்வாறு தான் கொண்டிருக்கும் அன்பைக் காதலை வெளிப் படுத்துவது என்று ஆராய்ந்து கொண்டிருந்தாள். சகுந்தலையின் தோழியடலெழுதென்றாள். மன்னனைக் கண்டாளே யன்றி அவன் பாலேதும் பேசவில்லை. எனினும் ஆசை அவள் நெஞ்சத்தைத் தூண்டாமடல் எழுதினாள்.

> " நின்னுடைய உள்ள நிலையறியேன் நின்பாலே
> மன்னுடைய வேட்கை மலிவுற்ற—என்னுறுப்பைக்
> காமன் இரவும் பகலும் கனற்றுகின்றான்
> ஏமவரு ளில்லா யிவன் "

"அருளற்ற அரசே! நின்பால் யான்வேட்கை கொண்டேன். வேட்கை கொண்ட உடலுறுப்புக்களை மன்மதன் இரவும் பகலும் எரிக்கின்றான். என்னால் பொறுக்க முடியவில்லை, இச் சூழ்நிலையில் நினது உள்ளக் கருத்தை இன்ன தன்மையதென்று அறிகிலேன்" என்று குறிப்பிடுகின்றாள் சகுந்தலை.

சகுந்தலை எழுதிய கடிதம் நாம் இக்காலத்தில் எழுதும் கடிதமல்ல (Paper) அவள் எழுதியது கிளியின் வயிறுபோன்ற பசுமையான தாமரை இலையாகும். எழுதுகோல் பேனாவோ, பென்சிலோ அல்ல; தன் கை நகங்களாலேயே எழுதினாள். அவள் இருந்த இடத்தில்தாமரை இலை இருந்ததால் அதையே மடலாகக் கொண்டாள். நமக்குக்கூட கடிதம் எழுத வேண்டுமென்றால் பேனா இருந்தால் கடிதம் இருக்காது; கடிதம் இருந்தால் பேனா இருக்காது. அவள் இதையெல்லாம் தேடிக் கொண்டிருக்க நேரமில்லாததால் தன் கை நகத்தையே எழுதுகோலாகக் கொண்டெழுதினாள். இவ்வாறு

சகுந்தலை தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தினள். அடுத்து மாதவியின் கடிதத்தை நோக்குவோம்.

செந்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் வரும் ஓர் கதாபாத்திரமே மாதவியாவாள். இவள் ஆடல், பாடல்களில் வல்லவளென்றும், எழில் மிக்கவளென்றும் அறியலாம். திருமணமான கோவலன் ஊழ்வினை வசத்தால் மாதவியென்னும் கணிகையர் குலமாதின் பால் மையலுற்றான். மாதவியும் கோவலனும் இன்பம் நுகர்ந்தார்கள். அதன் பரிசாகத் தோன்றியவளே மணிமேகலை யென்னும் மங்கையாவாள். கோவலன் மாதவியை ஒரு சமயம் பிரிய நேர்ந்தது. பிரிவுத் துன்பம் பொறாத மாதவியானவள் ஒரு அன்புமடல் எழுதத் தொடங்கினள். காதலர் கூட்டம் நிகழ்ந்த பின் இது நிகழ்ந்ததாகும்.

"மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீமின்"—

என்பதே மாதவி எழுதிய மடலாகும்:— "உலகத்தில் உயிர் வாழும் உயிர்களை யெல்லாம் தாம் மகிழ்ச்சி கொள்ளும் துணையோடு புணர்விப்பவன் வசந்தனென்பவன்; இளவேனிலென்னும் இளவரசனவான். எனவே ஒழுங்குபடச் செய்ய மாட்டான். மேலும் அந்திப் பொழுதிலே வானத்தில் அரும்புகின்ற திங்களாகிய செல்வனும் பிறப்பைக் காட்டிலும் கோட்டமுடையவன் ஆவான். எனவே கூடினவர் இடையே சிறிது தாழ்ந்துவிடினும் பிரிந்தவர் மறந்துவிடினும் நறுமணமிகக பூவாளிகளால் இன்பம் பெறும் அவ்வுயிரைக் கொண்டொறுத்தல் அவனுக்குப் புதியதான தொரு காரியமல்ல, நிகழ்ச்சியுமன்று; அதனை அறிந்துகொள்ளுங்கள்" —என்பது மேற்குறித்த பாடலின் கருத்தாகும்.

இவள் கடிதமாகக் கொண்டது முதிர்ந்ததும் அழகியதுமான தாழையின் வெண்மையான இதழையே யாகும். அவள் இருந்த இடம் நெய்தல் நிலம் ஆகும். நெய்தல் நிலத்தில் தாழை எளிதில் கிடைக்கும் பொருளாகும். எனவே, மாதவி இதனைத் தேர்ந்தெடுத்தாள். தாழை மடல் பளபளப்பும் நன் மணமும் உடையது. வாடியுலர்ந்தாலும், நிறமும் அழகும் கெடாத வண்மையுடையது. அவளுக்கு எழுதுகோலாகப் பயன்பட்டது நல் மணமுள்ள பூவரும்பின் முனையேயாகும்.

எழுதப்படும் மை செம்பஞ்சுக் குழம்பு—வெண்ணிற இதழில் செந்நிறக் குழம்பு எழுத்து தெளிவாதலாலும், காதலுக்கேற்ற இன்பம் தரும் பொருள்களாக அமைந்ததாதலாலும் நனிமிகச் சிறப்புடைத்தாம்.

சகுந்தலை அரசனால் ஏற்கப்பட்டவளாயினும் காதற் பயனுக்கு அனுபவமில்லாத புதியவளாவாள். குறிப்பாற் புலப்படுத்தினால் புதியவனான அரசன் பொருள் வேறு கொண்டு தன் காதலைப் புறக் கணிக்கவும் கூடுமாதலின், நின் கருத்தை அறிய முடியவில்லை யென்று வெளிப்படை யாகக் குறிப்பிட்டாள். இது மிகவும் பொருத்தமானதே! தாமரை யிலையில் எழுதப்பட்ட கடிதத்தால் வேந்தன் தாழாது வெளிப்பட்டான். எனவே அவ்விலையின் பயன் வீணாகவில்லை.

மாதவி எழுதிய கடிதம் கோவலனோடு கூடிக் காத லின்பம் துய்த்த பின்னரேயாகும். தனக்கு ஒருவர் அன்புக் கடிதம் எப்படி எழுத வேண்டுமென்று தெரிவிக்க வேண்டிய தில்லை. மாதவி கணிகையர் குலத்திலுதித்தவளாயினும் காதலும், அறிவும், அழகுமுடையவள்—தோழி வசந்தமாலை மூலம் கோவலனுக்குக் கடிதம் அனுப்பினாள் மாதவி. கடிதம் சிறிது தாமதமாகவே போய்ச் சேரும். தாமரையிலையின்றி தாழை மடலாக அமைந்தது மிகப் பொருத்தமானதாகும். கடல் விளையாட்டில் கோவலன் ஊடிப் பிரிந்தான். மாதவி யின் மனத்தில் துன்பப் புயல் வீசியது. யாழெடுத்து இசைத் துப் புறநீர்மை என்னும் பண்ணை வாசித்தாள். அவ்வின் பத்தில் கூடலின்பம் தோன்றி மயங்கித் தன் கருத்தைக் கோவலனுக்குப் புலப்படுத்தினாள்; திருமுகம் வரைந்தாள்.

கடிதங்கள் நாம் எத்துணையோ விதயாக அழகாக எழுத லாம். ஆனால் அன்பு மடல்கள் என்றியம்பப் படுகின்ற காதற் கடிதங்கள் எழுதுவது சற்றுக் கடினந்தான். எழுதுவோர் இயல்புகள், எழுதப்படுவோர் இயல்கள், எழுதும் வாசகங் கள், கருத்துச் சுடர்கள் கடிதம், எழுதுகோல், மை இவற்றை வைத்துச் சிந்தையைக் குளிர்விக்கும் வண்ணம் எழுதப் படுதல் வேண்டும். அவ்வாறு எழுதப்பட்டாலன்றி அக் கடிதத்தாற் பயன் பெற இயலாது. இவற்றையெல்லாம் நன்கு மனத்தில் கொண்டே தான் மாதவியின் மூலமாகவும், சகுந்தலையின் மூலமாகவும் முறையே இளங்கோவடிகளும், மகாகவி காளிதாசனும் பாத்திரத்தின் இயல்பை நன்கு புலப்படுத்தி வெற்றி பெற்றுள்ளனர்.

இன்றைக்கு இம்மடல்கள் தேவைதானா என்பது கேள்வி யன்று. அக்கால நிலையினை நாம் நன்கு தெரிந்து கொள்வ

சென்ற இதழ் தொடர்ச்சி :

# களவியல் உரைநலம்

## (இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

எனவும் தொல்காப்பியனார் ஐயத்துக்கும் தெளிவுக்கும் களவியற்பகுதிக்கண் இலக்கணம் ஓதுதலானும் தொல்லைப் பேராசிரியன்மார்க்கும் சொற்பாடு உடம்பாடாமெனத் தெளிக. அன்றியும் அகவொழுக்கத்துக்கைக்கிளை கூறப்படும் அமைவினை நன்கு கருதி.

மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப',

என நாற்கவிராச நம்பி நவிலல் காண்க. பேராசிரியரும்.

"இந்நான்கு பாட்டும் ஒருவருள்ளக் கருத்தை ஒருவர் அறியாத ஒருதலைக் காமமாகலிற் கைக்கிளைப்பால, அகத்திணையின்கண் கைக்கிளை வருதல் திணைமயக்காம் பிறஎனின், கைக்கிளை முதற் பெருந்திணையிறுவா யெழுதிணையினுள்ளும கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறமாயினும், களவிக்கோவையின் எடுத்துக் கோடற்கண் காட்சி முதலாயின சொல்லுதல் வனப்புடைமை நோக்கிக்கைக்கிளை தழீஇயினர்."

என்றதனானும் சொற்பாடின்றிக் கூட்டம் சிறவாதென உணர்க.

இவர் மேலதே பொருள் என்றார் தலைமகனும் தலைமகளும் ஒருபொழிலகத்து எதிர்பட்டுத்தம் உணர்வினரன்றி வேட்கை மிகவினாற்புணர்வர் என்ற உரையை நோக்கி என்க. அஃது இசையாமை மேலே கூறினும்.

இனி இந்நூற்பாவிற்கு உரையாமாறு கீழ்வருதும் :—

அதுவே என்பது—பண்டறிசுட்டு; மேற்சொல்லப்பட்ட கந்தருவ வழக்கம்போலுங்களவு என்றவாறு, தானே அவனே

---

தோடு இலக்கிய இன்பம் பெறவும் ஓர் தூண்டு கோலா யிருக்கும் என்றியம்பின் சிறிதும் ஐயமின்று. எனவே நாம் பண்டைய இலக்கியங்களைப் படித்துப் பயன் பெற்று, மேலும் மேலும் இதுபோன்ற நூல்கள் இயற்றப் பெறுதல் வேண்டும். இதுவே நாம் இலக்கியத்திற்குச் செய்யும் சீரிய பணியாகும்.

பொருவிறப்பினாற் பெரியராய தலைமகனும் தலைமகளும், என்றவாறு, தமியர் காண என்பது இளையரினீங்கித்தானும் ஆயத்தினீங்கி அவளும் ஒருவரையொருவர் காண்டற் பொருட்டாய்த் தமியராகி எதிரும் காட்சி பெற என்றவாறு; காமப்புணர்ச்சி—இருவருள்ளம் ஒருவர்பால் ஒருவர்க்குத் தோன்றும் அன்பு மீதூர நிகழும் கூட்டம் என்றவாறு; இருவயினொத்தல் என்பது—அக்கூட்டத்தாற் துய்க்கப்படும் இன்பம் இருவரிடத்தும் திரிபிலதாய் நிகழ்தல் என்றவாறு எல்லா நலன்களும் இருவர்பாலும் ஒத்திருப்ப, உண்டாம் இன்பம் திரிபிலதாய் நிகழும் என்க. இவ்வாறு உரைகாணாது களவியலுரையாசிரியர் வேறுவகையால் உரைகண்டாராகலின் இடர்ப்பட்டனர். சொற்பாடு நிகழ்தலையும் மறுக்கலானார் என்க.

அன்றியும், ஒருவரைஒருவர் காண்டல் நிமித்தமாகத் தமியராயவழி, வேட்கைமிகலும் "இஃது கைக்கிளை இலக்கணம். யாம் அகத்திணையுள் களவு ஒழுக்கம் நிகழ்த்துவாம் ஆகலின்சொல் நிகழ்த்தல் இலக்கண மன்றெனக் கருதித் தலைமகள் குறிப்பன்றியேயும் அவள் மெய்தொட்டுப் பயின்றான்எனல் பண்புடைமையன்றே! அவன்தன் உணர்வினானல்லனாதல் எதுபற்றியதோஎனின் இவ்வாறு தனியளாய் நின்றாளைக்கண்டு காமமுற்று அவளுடன் கூட்டம் விழைவது ஆகாதே என்று நோக்காமைபற்றியதே. ஆகலின் சொற்பாடு வேண்டும் ஆசிரியன்மார் கூற்றேசாலவும் சிறந்துநின்றது.

இனி, இயற்கைப்புணர்ச்சி, தெய்வப்புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, காமப்புணர்ச்சி ஆயவற்றிற்குக் களவியலுரையாசிரியர் தரும் விளக்கவுரை யாவரும் போற்றிக் கோடற்பாலது.

## ௰க. இருவாயின் ஒத்தல்

"இனி, இருவயின் ஒத்தல் என்பது—என்சொல்லியவாறோ எனின் புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் என்றவாறு. ஆயின் உலகினோடு ஒவ்வாது பிற, உலகினிற் புணராத முன் நின்ற அன்பு புணர்ந்த பின்றைத் தவிர்தலானும் என்பது. என்றார்க்கு, அறியாது சொல்லுதி. இஃது உலகத்துள்ள பான்மை. முன்னே கேட்டாயன்றே, இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என நூல் எடுத்துக் கேடாற்கண்ணே சொல்லிப் போந்து இனி ஒருகால் உலகினோடு ஒவ்வாதெனல் வேண்டுமோ என்பது. ஆயின் உலகினுள் அன்பன்றாக புணராத முன்நின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் எனின் புணர்ச்சியானாய பயம் இல்லையாம் பிற,

உண்ணுதமுன் நின்ற வேட்கை உண்ட பின்றையுந் தவிராது அப்பெற்றியே நிற்கும் எனின் உண்டதனுைய பயம் இல்லை. அதுபோல என்ருர்க்கு அதுவன்று; புணராத முன் நின்ற வேட்கை புணர்ச்சியுட் குறைபடும். அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கண் தம்முட் பெற்ற செய்குணங்களானுைய அன்பு நிறைவிக்கும். பின்னும் முன் நின்ற அன்பு கூட்டத்திற்குறை படும். அதற்கு இடையின்றியே குணத்தினுைய அன்பு நிறை விக்கும். நிறைவித்தபின் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறை யாது எஞ்ஞான்றும் ஒரு பெற்றியேயாய் நிற்கும் என்பது"

என இருவயின் ஒத்தல் என்ற தொடர்க்கு அகலவுரை கூறுவார். புணராதமுன் நின்ற அன்பு புணர்ச்சியுட் குறை படும். அதனைச் செய்குணங்களானுைய அன்பு நிறைவிக்கும். ஆகப் புணர்ந்த பின்னும் புணராதமுன் நின்ற அன்பு ஒரே பெற்றியாய் நிற்கும் என்றவுரை மிகவும் அழகியது. உரைத்து மகிழற்பாலது பேராசிரியரும் திருக்கோவையாரில் இங் ஙனமே உரை செய்தார். ஆயினும் ஏற்றுக் கொள்ளற் பால தன்று: என்னையோ காரணமெனிற் கூறுதும்.

புணராத முன்நின்ற அன்பு புணர்ச்சியுட் குறைபடுமியல் பிற்றன்று. அவருட்கிளர்ந்த புணர்ச்சிவேட்கையே ஒருவாற் ருன் தணிந்ததென்க. என்னை? அவர்தாம் முற்பிறவிகளில் அன்பான் பிணிப்புண்டு வாழ்ந்தாராகலின் அவ்வன்பு பின்னும் பெறுக்கமுறுதற் பொருட்டாக ஊழ் இவர்களைத் தமியராக்கிக் கூட்டம் பெறவைத்தாம் ஆகப் பிறவிதோறும் இருவரையும் பிணித்து நின்ற அன்பு இப்பிறவியில் ஒரு கூட்டத்தானே குறைபடுமெனல் குற்றமுடைத்து. இருவ ரிடையேயுமுள்ள அன்பு பெருகற்குப் புணர்ச்சி ஒரு துணைக் காரணம் அல்லது தலைக்காரணம் அன்று என்பது.

''பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் என்றிவற்றில் அவர்துணையாய வாறுபோல விதியும் இவரை ஆயத்தினீக்கிக் கூட்டின மாத்திரையேயன்றி அன்பிற்குக் காரணமன்றென் பது. அல்லதூஉம், விதியாவது செய்யப்படும் வினையினது நியதியன்றே, அதனுனே அன்பு தோன்றிப் புணர்ந்தாரெனின் அதுவும் செயற்கைப் புணர்ச்சியாய் முடியும். அது மறுத்தற் பொருட்டன்றே தொல்லோரிதனை இயற்கைப்புணர்ச்சி என்று குறியிட்டது. அல்லதூஉம், நல்வினை துய்த்தக்கால் முடிவெய்தும். இவர்கள் அன்புதுய்த்தாலும் முடிவெய்தாது எஞ்ஞான்றும் ஒருபெற்றியே நிற்குமென்பது. அல்லதூஉம் ''பிறப்பா னடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியர்." என்றலானும் இவர்கள் அன்பிற்குக் காரணம் விதியன் றென்பது."

(தொடரும்)